**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

## இஸ்ரோ விஞ்ஞானி லலிதாம்பிகாவுக்கு பிரான்ஸ் நாட்டின் உயரிய விருது




**பெங்களூரு:** பிரான்ஸ் பேரரசர் நெப்போலியன் போனபார்ட் கடந்த 1802-ம் ஆண்டு ‘லெஜியன் ஆப் ஹானர்’ என்ற பெயரில் ஒரு விருதை தோற்றுவித்தார். பிரான்ஸ் நாட்டுக்காக மிகச்சிறந்த சேவை செய்பவர்களுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது. அந்நாட்டின் மிக உயரிய விருதாக கருதப்படும் இது வெளிநாட்டவர்களுக்கும் வழங்கப்படுகிறது.

அந்த வகையில், இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் (இஸ்ரோ) மனித விண்கலம் திட்டத்தின் (ககன்யான்) முன்னாள் இயக்குநர் வி.ஆர்.லலிதாம்பிகாவுக்கு ‘லெஜியன் ஆப் ஹானர்’ விருது வழங்கப்பட்டுள்ளது. பெங்களூருவின் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற இந்தியாவுக்கான பிரான்ஸ் தூதர் தீரி மத்தாவ், லலிதாம்பிகாவிடம் இந்த விருதை வழங்கினார்.

பிரான்ஸ், இந்தியா இடையிலான விண்வெளி துறை தொடர்பான கூட்டு நடவடிக்கையில் முக்கிய பங்காற்றியதற்காக இந்த விருது அவருக்கு வழங்கப்பட்டுள்ளதாக பிரான்ஸ் அரசு தெரிவித்துள்ளது. குறிப்பாக, 2018-ல் இந்தியாவின் ககன்யான் திட்டத்துக்காக, பிரான்ஸ்

விண்வெளி நிறுவனத்துடன் இணைந்து பணியாற்றினார். இந்த திட்டம் தொடர்பாக இரு நாடுகளுக்கிடையே ஒப்பந்தம் கையெழுத்தாக இவர் முக்கிய காரணமாக இருந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மணிப்பூர் மைதேயி குழு மத்திய அரசுடன் ஒப்பந்தம்



ஆயுதங்களை ஒப்படைக்க அணிவகுத்து நின்ற யுஎன்எல்எஃப் படையினர்

**புதுடெல்லி:** மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா எக்ஸ் (முன்பு ட்விட்டர்) சமூக வலைதளபக்கத்தில் நேற்று வெளியிட்ட பதிவில் கூறியுள்ளதாவது:

வடகிழக்கில் அமைதியை நிலைநாட்ட மோடி தலைமையிலான அரசு இடைவிடாத முயற்சிகளை மேற்கொண்டு வந்தது. அதற்கு நல்ல பலன் கிடைத்துள்ளது. அதன்படி மணிப்பூரின் ஐக்கிய தேசிய விடுதலை முன்னணியுடன் (யுஎன்எல்எஃப்), அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதன் மூலம் புதிய அத்தியாயம் தொடங்கியுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் மூலம் மணிப்பூரின் பழமையான யுஎன்எல்எஃப் ஆயுத குழு வன்முறை பாதையை கைவிட்டு தேசிய நீரோட்டத்தில் இணைய ஒப்புக்கொண்டுள்ளது ஒரு வரலாற்று மைல்கல். அமைதி மற்றும் முன்னேற்றத்தை நோக்கிய அவர்களின் பயணத்துக்கு நல்வாழ்த்துகளை தெரிவிக்க விரும்புகிறேன்.

இவ்வாறு அமித் ஷா கூறியுள்ளார்.

யுஎன்எல்எஃப் உட்பட பல்வேறு தீவிரவாத அமைப்புகளை தடை செய்வதாக மத்திய அமைச்சகம் கடந்த சில நாட்களுக்கு முன்பு அறிவித்தது. இந்தியாவின் இறையாண்மை, ஒருமைப்பாட்டுக்கு பாதகமாக இந்த அமைப்புகள் செயல்பட்டதையடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டது. இந்த சூழ்நிலையில் தற்போது இந்த அமைதி ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## சுயஉதவி குழு பெண்களுக்கு ட்ரோன் பயிற்சி வழங்கும் திட்டம்: பிரதமர் மோடி இன்று தொடங்குகிறார்

**புதுடெல்லி:** பிரதமர் அலுவலகம் நேற்று விடுத்த செய்தியில் கூறியிருப்பதாவது:

அரசின் முன்னணி திட்டங்கள் அதன் பயனாளிகளுக்கு குறித்த நேரத்தில் சென்றடைவதை உறுதி செய்து, அவற்றை செறிவூட்டுவதற்காக ‘விக்ஷித் பாரத் சங்கல்ப்யாத்ரா’ (வளர்ந்த இந்தியா தீர்மான யாத்திரை) நிகழ்ச்சி நாடு முழுவதும் நடத்தப்படுகிறது. இந்நிகழ்ச்சியில் அரசு திட்ட பயனாளிகளுடன் பிரதமர் மோடி இன்று காணொலி மூலம் கலந்துரையாடுகிறார். பெண்கள் தலைமையிலான வளர்ச்சியை உறுதி செய்ய, பிரதமர் மோடி எப்போதும் கவனம் செலுத்தி வருகிறார்.

இதன் அடுத்த கட்ட நடவடிக்கையாக பிரதமரின் பெண் விவசாயி ட்ரோன் மையத்தை, பிரதமர் மோடி இன்று தொடங்கி வைக்கிறார். இதன் மூலம் சுயஉதவிக் குழு பெண்களுக்கு டரோன்களை இயக்கும் பயிற்சி அளிக்கப்படும். அடுத்த 3 ஆண்டுகளில் சுய உதவிக்குழு பெண்களுக்கு 15 ஆயிரம் ட்ரோன்கள் வழங்கப்படும். இதன் மூலம் விவசாய பணிகளுக்கு ட்ரோன் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும். இந்த ட்ரோன் பயிற்சி சுய உதவிக் குழு பெண்களின் வாழ்வாதாரத்துக்கு உதவியாக இருக்கும்.

பிரதமரின் சுகாதாரமான இந்தியா தொலை நோக்குக்காக, மருத்துவ வசதிகள் குறைந்த செலவில் கிடைக்க பிரதமர் முக்கிய கவனம் செலுத்தி வருகிறார். மக்கள் மருந்தக திட்டம் மூலம், குறைந்த விலையில் மருந்து பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. தியோகர் எய்ம்ஸ் மருத்துவமனையில் 10,000-மாவது மக்கள் மருந்தகத்தை பிரதமர் மோடி தொடங்கி வைக்கிறார். மக்கள்

மருந்தகத்தின் எண்ணிக்கையை 10,000-லிருந்து 25,000-மாக அதிகரிக்கும் திட்டத்தையும் பிரதமர் மோடி இன்று தொடங்கி வைக்கிறார். இதன் மூலம் பிரதமர் தான் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுகிறார்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "ககன்யான் திட்டத்துக்கே இஸ்ரோவின் உடனடி முன்னுரிமை" - எஸ்.சோமநாத்



கொல்கத்தாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற இஸ்ரோ தலைவர் எஸ்.சோமநாத். உடன் மேற்கு வங்க ஆளுநர் ஆனந்த போஸ்.

**கொல்கத்தா:** இஸ்ரோ பல்வேறு முனைகளில் பணியாற்றிக் கொண்டிருந்தாலும், அதன் உடனடி முன்னுரிமை ககன்யான் திட்டத்துக்கே என்று எஸ்.சோமநாத் தெரிவித்துள்ளார்.

கொல்கத்தாவில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய இஸ்ரோ தலைவர் சோமநாத், "பல்வேறு திட்டங்களுடன் இஸ்ரோ செயல்பட்டு வருகிறது. அதேநேரத்தில், அதன் உடனடி முன்னுரிமை மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் திட்டமான ககன்யான் திட்டத்துக்கே. இந்த திட்டத்தின் மூலம் விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பி அவர்களை

பத்திரமாக அழைத்து வருவதே. இதுதான் இஸ்ரோவின் முதல் முன்னுரிமை திட்டம்.

வரும் 2025-ம் ஆண்டில், 400 கிலோமீட்டர் உயரத்தில் குறைந்த புவி சுற்றுப்பாதையில் ககன்யான் விண்கலத்தை 3 நாட்கள் நிலை நிறுத்தி விண்வெளியை ஆய்வு செய்வதாகும். அதற்கேற்ப, 2024 ஆம் ஆண்டு இறுதிக்குள் இந்திய விண்வெளி வீரருக்கு பயிற்சி அளிக்க அமெரிக்க விண்வெளி நிறுவனம் உதவும். விண்வெளி ஆய்வு மையம் அமைப்பது இஸ்ரோவின் மற்றொரு முக்கிய திட்டம். இந்தத் திட்டம் 2028-ம் ஆண்டுக்குள் தொடங்கப்பட்டு 2035-ம் ஆண்டுக்குள் முடிக்கப்படும்.

2040-ஆம் ஆண்டுக்குள் நிலவுக்கு மனிதர்களை அனுப்புவதையும், 2035 ஆம் ஆண்டுக்குள் இந்திய விண்வெளி நிலையத்தை நிறுவுவதையும் இலக்காகக் கொள்ளுமாறு கடந்த அக்டோபரில் பிரதமர் நரேந்திர மோடி, இஸ்ரோவிடம் கேட்டுக்கொண்டார். அதனை கருத்தில் கொண்டு நாங்கள் செயல்பட்டு வருகிறோம்.

சூரியனை ஆய்வு செய்வதற்கான இந்தியாவின் முதல் விண்வெளி அடிப்படையிலான பணியான ஆதித்யா எல்1 அதன் பாதையில் உள்ளது. வரும் ஜனவரி 7-க்குள் அது லாக்ரேஞ்ச் புள்ளி 1 (L1)-இல் நுழையும் என்பது எங்கள் எதிர்பார்ப்பு. இந்த செயற்கைக்கோள் பூமியில் இருந்து 15 லட்சம் கிமீ தொலைவில் உள்ள எல்1 புள்ளியில் நிலை நிறுத்தப்படும். அந்தப் பகுதியில் வைக்கப்படும் செயற்கைக்கோள், எந்த ஒரு கோளின் குறுக்கீடும் இன்றி சூரியனைப் பார்க்கும்.

சந்திராயன்-3 வெற்றி அனைவருக்கும் ஓர் உத்வேகத்தை உருவாக்கியுள்ளது. நிலவில் வெற்றிகரமாக தரையிறங்கிய நான்காவது நாடு; தெற்குப் பகுதியில் தரையிறங்கிய முதல் நாடு எனும் பெருமையை இந்தியா பெற்றுள்ளது. இவையனைத்தும் இந்தியாவின் அறிவியல் மற்றும் பொறியியல் திறனின் வளர்ச்சியைக் காட்டுகிறது" என்று தெரிவித்தார்.

IAS ACADEMY

## “பயங்கரவாதத்தை சற்றும் பொறுத்துக் கொள்ளாத கொள்கையுடன் அணுகுகிறோம்” - ஐ.நா.வில் இந்தியப் பிரதிநிதி பேச்சு




**நியூயார்க்:** பயங்கரவாதத்தை சற்றும் பொறுத்துக் கொள்ளாத கொள்கையுடன் அணுகுகிறோம் என ஐ.நா. பொதுச்சபைக்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதி ருச்சிரா காம்போஜ் தெரிவித்துள்ளார். சர்வதேச ஒற்றுமை நாளை ஒட்டி பாலஸ்தீன மக்களுடன் இந்தியா நிற்பதாகக் கூறிய இந்தியப் பிரதிநிதி, இஸ்ரேல் - பாலஸ்தீனப் பிரச்சினைக்கு இந்தியா எப்போதுமே ’இரு நாடுகள்’ தீர்வை முன்வைத்து வருகிறது என்றார்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்றிய ருச்சிரா காம்போஜ், ” இஸ்ரேல் - பாலஸ்தீன் இடையே மனிதாபிமான அடிப்படையில் தற்காலிக போர் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது. உரிய நேரத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. மனிதாபிமான உதவிகள் பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடைய இந்தப் போர் நிறுத்தம் உதவும்.

இந்தியா இதுவரை 70 டன் அளவிலான மனிதாபிமான அடிப்படையிலான நிவாரண உதவிகளையும் 16.5 டன் மதிப்பிலான மருந்துகளையும் பாலஸ்தீன மக்களுக்காக அனுப்பியுள்ளது.

இந்தப் போருக்கு வித்திட்டது அக்டோபர் 7ல் நடத்தப்பட்ட திடீர் தாக்குதல் தான் என்பதை நாங்கள் அறிந்துள்ளோம். அந்தத் தாக்குதலை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். பயங்கரவாதம், பிணைக் கைதிகளாக அப்பாவிப் பொதுமக்களைப் பிடித்துச் செல்லுதல் போன்ற செயல்களை எதைக் கொண்டும் நியாயப்படுத்த இயலாது. ஹமாஸ் குழுவினரால் பிடித்துச் செல்லப்பட்ட பிணைக் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும் என்பதையே நாங்கள் எதிர்பார்க்கிறோம். அதனால் எந்தவித நிபந்தனையுமின்றி பிணைக்கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்று இந்தியா விரும்புகிறது.

பிரதமர் மோடியும், வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரும் இவ்விவகாரத்தில் பல்வேறு உலகத் தலைவர்களுடன் தொடர்ந்து ஆலோசித்து வருகின்றனர். போர் தீவிரமடையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும், மனிதாபிமான உதவிகள் மறுக்கப்படக் கூடாது, அமைதியும், ஸ்திரத்தன்மையும் விரைவில் மீட்டெடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர். பேச்சுவார்த்தை மூலமாக பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு எட்டப்பட வேண்டும் என்பதை இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

அதுவும் பேச்சுவார்த்தை மூலம் 'இரு நாடு தீர்வை' நோக்கி நகருமாறு இஸ்ரேல், பாலஸ்தீனுக்கு வலியுறுத்தி வருகிறது. இரு நாடு தீர்வு மட்டுமே சுதந்திரமான, இறையான்மை பொருந்திய பிராந்தியத்தை உருவாக்கும். வரையறுக்கப்பட்ட எல்லைகள் நீடித்த அமைதிக்கு வழிவகுக்கும்.

இந்தியா எப்போதுமே பாலஸ்தீனத்துடன் இருநாட்டு நல்லுறவைப் பேணும். சுகாதாரம், கல்வி, பெண்கள் அதிகாரத்தை உறுதி செய்தல்

ஆகியவற்றில் இணைந்திருக்கும். இஸ்ரேல் - பாலஸ்தீன் பிரச்சினைக்கு அமைதியின் வழியில் நிரந்தரத் தீர்வு என்பதே இலக்கு" என்றார்.

இஸ்ரேல் - ஹமாஸ் போர் கடந்த அக்டோபர் 7 ஆம் தேதி முதல் நடந்து வருகிறது. இதில் காசாவில் இதுவரை 15000க்கும் அதிகாமானோர் உயிரிழந்துள்ளனர். இஸ்ரேல் தரப்பிலும் 1200க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இப்போது தற்காலிகப் போர் நிறுத்தம் 5வது நாளை எட்டியுள்ளது. இருதரப்பிலும் பிணைக் கைதிகள் பரிமாறிக் கொள்ளப்பட்டு வருகின்றனர். இந்தப் போர் நிறுத்தம் மேலும் நீட்டிக்கப்பட்ட கத்தார், எகிப்து நாடுகள் மத்தியஸ்தம் செய்து வருகின்றன. அமெரிக்காவும் இஸ்ரேல் - ஹமாஸ் 'இரு நாட்டு' தீர்வை நோக்கி நகர வேண்டும் என்றும் அதற்கும் அமெரிக்கா துணையாக இருக்கும் என்றும் உறுதி அளித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது,

**உலக கோடீஸ்வரர் பட்டியல்: 19-வது இடத்தில் அதானி**



**மும்பை:** கடந்த ஜனவரி மாதம் அமெரிக்காவைச் சேர்ந்த ஹிண்டன்பர்க் நிறுவனம் அதானி குழுமம் குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதில், அதானி குழுமம் பங்கு மோசடி உட்பட பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டு வருவதாக ஹிண்டன்பர்க் குற்றம்சாட்டியது.

இதைத் தொடர்ந்து அதானி குழுமத்துக்கு ரூ.11 லட்சம் கோடிஇழப்பு ஏற்பட்டது. அதானி நிறுவனங்களில் முதலீடு செய்திருந்த முதலீட்டாளர்கள் கடும் பாதிப்பை

எதிர்கொண்டனர். இந்நிலையில், இது தொடர்பான வழக்கு விசாரணை கடந்த வாரம் வெள்ளிக்கிழமை உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்றது.

இவ்வழக்குத் தொடர்பான மனுக்களை விசாரித்த தலைமை நீதிபதி டி ஒய் சந்திரசூட் தலைமையிலான அமர்வு, ஹிண்டன்பர்க் அறிக்கையை முழுமுற்றான உண்மை என்று எடுத்துக்கொள்ள முடியாது என்றும் செபியின் விசாரணையை சந்தேகிப்பதற்கு எந்த முகாந்திரமும் இல்லை என்றும் தெரிவித்து, தீர்ப்பை ஒத்திவைத்தது.

இதையடுத்து அதானி குழும நிறுவனங்களின் பங்கு மதிப்பு தொடர் உயர்வைக் கண்டு வருகின்றன.

நேற்றைய தினம் அதானி குழுமநிறுவனங்களின் பங்கு மதிப்பு ரூ.33 ஆயிரம் கோடி ஏற்றம் கண்டது. அதானியின் சொத்து மதிப்பு 53.8 பில்லியன் டாலராக(ரூ.4.46 லட்சம் கோடி) உயர்ந்துள்ளது. இந்நிலையில் உலக கோடீஸ்வரர்களின் பட்டியலில் அதானி 19-ம் இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் அதானி, உலக கோடீஸ்வரர்களின் பட்டியலில் 3-ம் இடத்தில் இருந்தார். ஹிண்டன்பர்க் அறிக்கை வெளியானதையடுத்து அவரதுசொத்து மதிப்பு கடும் சரிவைச்சந்தித்தது. இதனால், பட்டியலில் 25-ம் இடத்துக்கு பின்தள்ளப்பட்டார். தற்போது அவரது நிறுவனங்களின் பங்கு மதிப்பு உயர்ந்து வருகிற நிலையில், பட்டியலில் முன்னகர்ந்து வருகிறார்.

EVA ST

## திருவள்ளூர் மாநாட்டில் ரூ.822.83 கோடி முதலீடுகள் செய்வதற்கான ஒப்பந்தங்கள்



**திருவள்ளூர்:** தமிழ்நாடு அரசு, ஜன. 7, 8-ம் தேதிகளில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை சென்னையில் நடத்த திட்டமிட்டுள்ளது.

இம்மாநாட்டை முன்னிட்டு, திருவள்ளூர் மாவட்ட அளவிலான தொழில் முதலீடுகள் மாநாடு நேற்று திருவள்ளூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்டரங்கில் நடைபெற்றது. குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை மற்றும் மாவட்ட தொழில் மையம் சார்பில் நடைபெற்ற இம்மாநாட்டில், கைத் தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி சிறப்பு விருந்தினராக பங்கேற்றார்.

இம்மாநாட்டில், அமைச்சர் ஆர்.காந்தி தலைமையிலும், மாவட்ட ஆட்சியர் பிரபு சங்கர் முன்னிலையிலும் 20 தொழில் நிறுவனங்கள் சார்பில் 3,912 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும் வகையில் ரூ.822.83 கோடி மதிப்பில் முதலீடு செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

EVASTALIN IAS

இந்நிகழ்வில் மாவட்ட கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி), மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் சுகபுத்ரா, மாவட்ட தொழில் மைய பொதுமேலாளர் சேகர் பங்கேற்றனர்.

EVA STALIN IAS ACADEMY